Vol : 8

இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

Issue : 9

Price Rs.3

# HUNDRED VILLAGE MINISTRY

JULY 2008

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विलेज मिनिस्ट्री ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

Annual Subscription India Rs.25 Foreign Rs.250

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




**2008 ஜூலை**

**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

**ஜெயமோ**
**கர்த்தரால் வரும்.**

நீதிமொழிகள் 21 : 31




சேலம் – **கொங்குப்பட்டி** கிராமத்தில் 21.05.2008 அன்று டி.வி.ஜி.எம். மூலம் JMHA சபைக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

**நன்றி :-**

Bro. **வர்மா குடும்பம்**

Illford - U.K.

Emmanuel Christian fellowship

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**CHIEF EXECUTIVE OFFICER**
காரியதரிசி கடித நாள்: 10.06.08.



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!

கடந்த மாதத்தில் சேலம் மாவட்டத்தில் **கொங்குப்பட்டி** கிராமத்தில் **சகோ.வர்மா** ( Illford ) மூலம் ஆலயம் கட்டப்பட்டது.

மேலும் ஏழை, எளிய மக்களுக்கு Bro.Raffle & Family (Emmanuel Christian Fellowship) காணிக்கையின் மூலம் கொங்குப்பட்டியில் தொழில்கூடம் அமைக்க ஒரு ஓலை ஷெட் கட்டப்பட்டுள்ளது. 5 கைத்தறி இயந்திரங்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக, கிராமங்களில் அவர்கள் சூழ்நிலைகளுக்கு ஏற்ப சிறுசிறு தொழில்கள் சபை போதகர்கள் தலைமையில் அமைத்துக் கொடுத்தால் ஏழைகளின் அன்றாட தேவைகளும் சந்திக்கப்படும். அத்துடன் சபை மூலமாக ஆத்தும ஆதாயமும் நடைபெறும்.

நம்முடைய TVGM வெப்சைட்டில் அந்தந்த மாதங்களில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகள், தினசரி வாக்குத்தத்தம் வெளியிட திட்டமிட்டுள்ளோம்.

ஆதலால் இண்டர்நெட் வசதியுள்ளவர்கள் கட்டாயமாக நமது **www.tvgm.org** வெப்சைட்டை பார்த்து பயனடையும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக
கிறிஸ்துவுக்குள்,
***Stephen Christopher.***

## உள் பக்கம் ...


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| Wrapper – வாக்குத்தத்தம் | Photos |
| Wrapper - Inner | Photos |
| காரியதரிசி கடிதம் | 1 |
| வாக்குத்தத்த செய்தி | 2 - 4 |
| Hindi, Malayalam, English | 5 - 8 |
| தோவாளை 100 கிராம ஊழியம் | 9 |
| குன்றாண்டார்கோவில் 100 கிராம ஊழிய அறிக்கை திண்டுக்கல் – ஆத்தூர் இயேசுவை விரும்புவோர் முகாம் | 10 -12 |
| புறமத நண்பர்கள் சாட்சி விசுவாசிகளின் சாட்சிகள் | 13 |
| சீஷத்துவ பயிற்சி நிலையம் | 14,15 |
| இலங்கை அகதிகள் உணவு | 16 |
| பஞ்சப்பூர் தொழுநோயாளி உதவி | 17 |
| புதுக்கோட்டை இயேசுவுக்கே | 18 |
| தினசரி ஜெபக்குறிப்புகள் | 19 |
| அர்ப்பணிப்புள்ளவர் தேவை | 20 |
| போட்டோ Visitors & VBS | W 3 |
| தொடர்பு முகவரி | W4 |


### 12 மணி நேர துதி ஆராதனை

**இடம் :** டி.வி.ஜி.எம். தலைமையிடம்
100–கிராமம், திருச்சி.

**நாள் : 01.07.2008** செவ்வாய்

**துதி ஆராதனை நேரம்:**
காலை 7 மணி முதல் மாலை 7 முடிய

**வாக்குத்தத்த செய்தி நேரம்:**
மாலை 7 முதல் 8 மணி வரை

**வாக்குத்தத்த தேவசெய்தி:**
**சகோ. பி.டி.கிறிஸ்டோபர்**

உங்களுக்கு வசதியான நேரம் வந்து கலந்துகொள்ளுங்கள்.

# ஜெயமோ கர்த்தரால் வரும். நீதி. 21 : 31

**நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.**
1கொரி.15 : 57

ஜெயத்திற்காக காத்துக் கொண்டிருக்கும் தேவபிள்ளையே, கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது:

**ஜெயமோ கர்த்தரால் வரும்.**

சங்கீதம் 121:1,2

எனக்கு ஒத்தாசை வரும்
பர்வதங்களுக்கு நேராக
என் கண்களை ஏறெடுக்கிறேன்.
வானத்தையும் பூமியையும்
உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து
எனக்கு ஒத்தாசை வரும்.

சங்கீதக்காரனைப் போல நீங்களும் கூறுவீர்களா ?

**கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.**

மீண்டும் மீண்டுமாக அறிக்கை செய்யுங்கள்.

எண்ணாகமம் 13:30

**நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம்.**

காலேப், மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தி கூறும் வார்த்தையானது **"நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம்"**.

கர்த்தர் மோசேயை நோக்கி, நான் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுக்கும் கானான் தேசத்தை சுற்றிப் பார்ப்பதற்கு, நீ மனிதரை அனுப்பு. ஒவ்வொரு பிதாக்களின் கோத்திரத்திலும், ஒவ்வொரு பிரபுவாகிய புருஷனை அனுப்ப வேண்டும் என்றார்.

மோசே கர்த்தருடைய வாக்கின்படியே அவர்களை பாரான் வனாந்திரத்திலிருந்து அனுப்பினான்.

அவர்களை மோசே கானான் தேசத்தை சுற்றிப் பார்க்கும்படி அனுப்புகையில் அவர்களை நோக்கி, நீங்கள் இப்படி தெற்கே போய், மலையில் ஏறி தேசம் எப்படிப்பட்டதென்றும், அங்கே குடியிருக்கிற ஜனங்கள் எப்படிப்பட்டதென்றும், பலவான்களோ, பலவீனர்களோ, கொஞ்சம் பேரோ, அநேகம் பேரோ என்றும், அவர்கள் குடியிருக்கிற தேசம் எப்படிப்பட்டது, அது நல்லதோ, கெட்டதோ என்றும், அவர்கள் பட்டணங்கள் எப்படிப்பட்டதென்றும், அவர்கள் கூடாரங்களில் குடியிருக்கிறவர்களோ, கோட்டைகளில் குடியிருக்கிறவர்களோ என்றும், நிலம் எப்படிப்பட்டது, அது வளப்பமானதோ, இளப்பமானதோ என்றும், அதில் விருட்சங்கள் உண்டோ இல்லையோ என்றும் பாருங்கள். தைரியங்கொண்டிருந்து, தேசத்தின் கனிகளிலே சிலவற்றை கொண்டு வாருங்கள் என்றான்.

அவர்கள் தேசத்தை சுற்றிப் பார்த்து, நாற்பது நாள் சென்றபின்பு திரும்பினார்கள். மோசே, ஆரோன் என்பவர்களிடத்திலும், இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரிடத்திலும் சேர்ந்து, அவர்களுக்கும் சபையார் அனைவருக்கும் சமாசாரத்தை அறிவித்து, தேசத்தின் கனிகளை அவர்களுக்குக் காண்பித்தார்கள்.

அவர்கள் மோசேயை நோக்கி: நீர் எங்களை அனுப்பிய தேசத்துக்கு நாங்கள் போய் வந்தோம்; அது பாலும்

தேனும் ஓடுகிற தேசம் தான். இது அதினுடைய கனி.

ஆனாலும் அந்த தேசத்திலிருக்கிற ஜனங்கள் பலவான்கள். பட்டணங்கள் அரணிப்பானவைகளும், மிகவும் பெரியவைகளுமாய் இருக்கிறது.

அங்கே ஏனாக்கின் குமாரரையும் கண்டோம். அமலேக்கியர் தென்புறமான தேசத்தில் குடியிருக்கிறார்கள். ஏத்தியரும், எபூசியரும், எமோரியரும் மலை நாட்டில் குடியிருக்கிறார்கள். கானானியர் கடல் அருகேயும், யோர்தானண்டையும் குடியிருக்கிறார்கள் என்றார்கள்.

மோசேக்கு முன்னால், கானான் பற்றிய முழு விபரங்களும், எதிரிகளைப் பற்றிய முழு விபரங்களும் சொல்லப் படுகிறது.

ஆனாலும் காலேப் சொல்லுகிற வார்த்தையை கேளுங்கள்.

**"நாம் உடனே போய்**
**அதை சுதந்தரித்துக்கொள்வோம்"**
என்றார். அல்லேலுயா.

என் அன்பு தேவபிள்ளையே! சூழ்நிலைகள் எதுவாகவும் இருக்கட் டுமே காலேப் போல விசுவாச வார்த்தையை கூறுங்கள். எதிரிகளைப் பார்த்து துவள வேண்டாம்.

**நாம் உடனே போய்**
**அதை சுதந்தரித்துக் கொள்வோம்.**
**நாம் அதை எளிதாய் ஜெயித்துக்**
**கொள்ளலாம்.**

மீண்டும், மீண்டுமாக உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

1யோவான் 5:4,5

**தேவனால் பிறப்பதெல்லாம்**
**உலகத்தை ஜெயிக்கும்;**
**நம்முடைய விசுவாசமே**
**உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.**

யோவான் 16:33 **இயேசு கூறுகிறார்:**
**நான் உலகத்தை ஜெயித்தேன்.**

ஆதலால் என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே, இயேசுவின் நாமத்தினால் நீங்களும் ஜெயிப்பீர்கள்.

ஏசாயா 25:8

**அவர் மரணத்தை ஜெயமாக**
**விழுங்குவார்.**

அப்படியானால் நீங்கள் உங்கள் வேதனைகளை, சோதனைகளை ஜெயமாக விழுங்குவீர்கள். ஆமென்!

**ஜெயமோ கர்த்தரால் வரும்.**

சங்கீதம் 41:11

**என் சத்துரு என்மேல்**
**ஜெயங்கொள்ளாததினால்,**
**நீர் என்மேல்**
**பிரியமாயிருக்கிறீரென்று**
**அறிவேன்.**

கர்த்தர் உங்கள் மேல் பிரியமாயிருக்கிறார். ஆதலால் ஜெயம் பெறுவீர்கள்.

உங்கள் வாழ்க்கையின் பிரச்சனைகளை முழங்காலில் நின்று ஒரு முறை தேவசமுகத்தில் கொண்டு வாருங்கள். எந்த கோலியாத்தாகவும் இருக்கட்டுமே. நீங்களும் கூறுங்கள். **பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம். செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய்.** ஆமென்.

ஆம், **நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது.**

உலக ஆசீர்வாதத்திற்காக மட்டுமல்ல, நீங்கள் பரம கானான் தேசத்தை சுதந்தரிக்கவேண்டுமென்பதே தேவசித்தமாயிருக்கிறது. ஆதலால் இவ்வுலகத்தை நாம் ஜெயிக்க வேண்டும்.

**பக்தன் பாடுகிறார்:–**

**உலகம், மாமிசம், பிசாசுக்கடியில்**
**அடிமையாகவே**
**பாவி நான் ஜீவித்தேன்.**
**நிம்மதி இழந்தேன்,**
**தூய்மையை மறந்தேன்.**

**மனம் போல் அலைந்தேன்**
**ஏமாற்றம் அடைந்தேன்.**
**என்னையா தேடினீர் ஐயா ஏசுநாதா**
**உம்மை மறந்ததோர் துரோகி நான்.**
**உம்மைப்போல் யாருண்டு**
**எந்தன் இயேசுநாதா.**

பாடுங்கள். பாடிக்கொண்டேயிருங்கள். ஜெயம் பெறுவீர்கள்.

## நாம் ஏன் உலகத்தை ஜெயிக்க வேண்டும்?

**இரண்டு முக்கிய காரணங்கள்.**

**1. ஜாதிகளிடத்தில் அதிகாரம் தருவார்.**

வெளி.2:26.

ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம்
என் கிரியைகளைக்
கைக்கொள்ளுகிறவனெவனோ,
அவனுக்கு நான் என்
பிதாவினிடத்தில் அதிகாரம்
பெற்றதுபோல, **ஜாதிகள்மேல்**
**அதிகாரம் கொடுப்பேன்.**

இயேசு கூறுகிறார்: மத்தேயு 28:18,19. வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது.

ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய் **சகல ஜாதிகளையும் சீஷராக்கி,** பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்க ளுக்கு ஞானஸ்நானங் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள் ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்.

இயேசு பரலோகத்திற்கு செல்வதற்கு முன்னால் தம்முடைய சீஷர்களை நோக்கி, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றார். வெளிப்படுத்தின விசேஷத்திலே **ஜாதிகளின் மேல் அதிகாரம் கொடுப்பேன்** என கூறுகிறார்.

**2. சிங்காசனத்தில் உட்கார செய்வார்.**

வெளி.3:21

ஜெயங்கொள்ளுகிறவனெவனோ
அவனும் என்னுடைய சிங்காசனத்தில்
என்னோடேகூட உட்காரும்படிக்கு
அருள்செய்வேன்.

இன்றைக்கு அரசியல்வாதிகள் அனைவரும் ஏன் திருச்சபை தலைவர்கள் கூட சிங்கானத்தின்மேல் வீற்றிருப்பதற்காக எவ்வளவோ போட்டிகள் போட்டுக் கொண்டிருக் கிறார்கள். ஆனால் நம்முடைய தேவனோ வாடாத கிரீடத்தை நமக்கு தருவதற்கு சித்தமுள்ளவராயிருக்கிறார். ஜெயங்கொள்கிறவர்களை அவரோடே கூட சிங்கானத்தில் உட்காரும்படி அருள்செய்வதற்கு சித்தமுள்ளவரா யிருக்கிறார்.

அப்படியானால் நாம் உலகம், மாமிசம், பிசாசுகளை ஜெயிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

**உலகத்தை ஜெயிப்பது எப்படி?**

வெளி.12:11

மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும்
அதற்குத் தப்பும்படி தங்கள்
ஜீவனையும் பாராமல்,
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும்
தங்கள் சாட்சியின் வசனத்தினாலும்
அவனை ஜெயித்தார்கள்.

**பக்தன் பாடுகிறார்:-**
**ஆட்டுக்குட்டி இரத்தத்தினால்**
**சாத்தானை ஜெயித்துவிட்டோம்**
**ஆவி உண்டு, வசனம் உண்டு**
**அன்றாட வெற்றியுண்டு.**

**நீங்களும் பாடுங்கள். இயேசுவின் இரத்தத்தினலும், வசனத்தினாலும் சாத்தானை ஜெயிப்போம்.**

வசனத்தை மீண்டும் மீண்டுமாக அறிக்கை செய்யுங்கள்.

**ஜெயமோ கர்த்தரால் வரும்.**
**ஜெயமோ கர்த்தரால் வரும்.** ஆமென்.

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ.** 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை** அறிவித்தல்.

## கன்னியாகுமரி - தோவாளை யூனியன்
## 100 - கிராம ஊழியம்

**<u>நோக்கம்:</u> 2008 ஜுலை 14** திங்கள் காலை 9 மணி முதல் **ஜுலை 18** வெள்ளி இரவு 10 மணி முடிய **கன்னியாகுமரி மாவட்டம் – தோவாளை யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2008 ஜுலை 14** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2008 ஜுலை 18** வெள்ளி இரவு **7 - 10** முடிய

**( 2008 ஜுலை 14 - 18 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**<u>உபவாச ஜெபம் நடைபெறும் இடம்</u>**

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்,**
**C/o கிறிஸ்துவின் கிருபை ஊழியங்கள்,**
**முத்து நகர்,**
**தோவாளை - 629 302.**
**கன்னியாகுமரி மாவட்டம்.**
**போன் : 04652 - 262759, செல்: 94432 10110**

**<u>நன்றி</u>** : உதவி செய்ய முன் வந்த Pr. **ஜான்** E.**கிறிஸ்டோபர்** அவர்களுக்கு நன்றி!

**<u>தகுதி</u>** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**<u>பிரயாணப்படி</u>** : தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**<u>முக்கிய அறிவிப்பு</u>** : 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும். **எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**
2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**<u>சகல தொடர்புகளுக்கும்</u>** : சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# புதுக்கோட்டை - குன்றாண்டார்கோவில் யூனியன்
# 100-கிராம ஊழியம் அறிக்கை

**THANKS: Patmos ( Dr.Tor & Sis. Fera )**



கர்த்தருடைய கிருபையால் புதுக்கோட்டை – குன்றாண்டார்கோவில் யூனியனில் 12.05.2008 முதல் 15.05.2008 வரை 100–கிராம ஊழியம் ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல்நாள், கடைசிநாள், கூடுமிடம், உணவு இவைகளை கீரனூர் **பாஸ்டர் டேனியேல்** அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள். கிராம ஊழியர்களுக்கு சகோ.சாம்ராஜ் அவர்கள் இனிப்பு பாக்கெட்டுகள் வாங்கி கொடுத்து சந்தோஷப்படுத்தினார்கள்.

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து 39 கிராம ஊழியர்கள் கலந்துகொண்டு ஊழியம் செய்தார்கள். முதல்நாள் ஜெபத்தில் **குன்றாண்டார் கோவில்** யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களை வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தில் கீரனூர் **பாஸ்டர் டேனியல்** அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள். இதன்பின் கிராம ஊழியர்களை 9 குழுவாகப் பிரித்து, கிராமங்களில் பெயர் விபரப் பட்டியல் ஒவ்வொரு குழுவிற்கும் வழங்கப்பட்டது. இவர்கள் குழுகுழுவாக கூடி தாங்கள் போகிற கிராமங்களுக்காக ஜெபித்து, அவரவருக்கு கொடுக்கப்பட்ட கிராமங்களுக்கு கடந்து சென்றனர். 4 நாட்கள் கிராமங்களில் தங்கியிருந்து வீடுவீடாக யோவான் சுவிசேஷப் புத்தகம், கைப்பிரதி, சிலுவைக்கொடி கொடுத்து ஊழியம் செய்தார்கள். மொத்தம் 8,587 வீடுகளுக்கு யோவான் சுவிசேஷப் புத்தகம் இலவசமாக வழங்கினார்கள். இதோடு 12,000 கைப்பிரதிகள், 7090 சிலுவைக்கொடிகளும் வழங்கப்பட்டது. 118 பேர் தங்களுடைய விலாசங்களை கொடுத்து தபால் மூலம் வேதபாடங்களை அனுப்ப கேட்டுக் கொண்டார்கள்.

இப்படி 5 நாட்கள் ஊழியங்களை முடித்து, மீண்டும் முன்பு கூடிய இடத்தில் கூடி ஜெபித்து, கர்த்தர் தங்களை கிராமங்களில் எப்படியாக நடத்தினார் என்பதை சாட்சியாக கூறி தேவனை மகிமைப் படுத்தினார்கள்.

இந்த கடைசிநாள் ஜெபத்தில் **Patmos - Mr.Hariyo** குடும்பத்தினரும் **Dr.Tor** அவர்களும் கலந்து கொண்டு கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகளை கேட்டு ஆச்சரியப்பட்டார்கள். தேவசெய்தி கொடுத்து ஊழியர்களை உற்சாகப்படுத்தினார்கள். கடைசிநாள் சிறப்பு விருந்தளித்தார்கள். கிராம ஊழியர்களுக்கு பிரயாணப்படியும் வழங்கப்பட்டது.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**<u>குழு 1:</u> பாஸ்டர் ஆல்வின், சகோ. ஜெபமலைநாதன், பீட்டர் ராமலிங்கம், ஜான் உதயக்குமார்.**

நாஞ்சூர், வாலியம்பட்டி ஊராட்சிகளிலுள்ள கிராமங்களில் வீடுவீடாக

சென்று யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து சத்தியத்தை அறிவித்தோம். யாவரும் பெற்றுக் கொண்டார்கள். எங்களுக்கு எந்தவித எதிர்ப்பும் இல்லை. மொத்தம் 800 சுவிசேஷப் புத்தகங்களும், 750 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்

**<u>குழு 2:</u> சகோதரி டோரா லாசர், ஷீலா, அந்தோணிமேரி, லூயிஸ் அம்மாள், சமாதானமேரி**

மங்கத்தேவன்பட்டி, வீரக்குடி ஊராட்சிகளிலுள்ள 10 கிராமங்களில் சுவிசேஷம் சொல்லி, யோவான் புத்தகம் கொடுத்தோம். யாவரும் அன்பாக ஏற்றுக் கொண்டனர். ஒரு சிலர் மட்டும் வேண்டாம் என்று சொல்லி எங்களை விரட்டினார்கள். இந்தப் புத்தகம் எதற்கு என்று கேட்டார்கள். இவர்களுக்கு தகுந்த பதிலைக் கூறினோம் உங்கள் இயேசுவை சிலுவையில் அறைந்து கொன்றார்கள். அவரால் தப்பித்துக் கொள்ள முடியவில்லை. அவரால் எங்களை எப்படி காப்பாற்ற முடியும் ? எப்படி அவர் ஆசீர்வதிப்பார் ? என்று கேட்டார்கள். இரண்டு பையன்கள் சத்தியத்தைக் கேட்டு **இயேசுவை ஏற்றுக் கொண்டு கையில் கட்டியிருந்த கயிறுகளை அறுத்துப் போட்டார்கள்.** மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 700 சிலுவைக்கொடி களும் கொடுத்தோம்.

**<u>குழு 3:</u>சகோதரி எஸ்தர் கனகாம்புஜம், கிளமெண்ட்ஸ்மேரி, கிரேஸ்பத்மா, அன்னாள்.**

நாங்கள் உடையாளிப்பட்டி, ராக்கத்தாம்பட்டி ஊராட்சிகளிலுள்ள 10 கிராமங்களில் வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்தோம். சிலர் இந்தப் புத்தகத்தை எதற்கு கொடுக்கிறீர்கள் ? இதை நாங்கள் என்ன செய்வது என்று கேட்டார்கள். இவர்களுக்கு இயேசுவின் வரலாறும், அவருடைய உபதேசங்களும் இதில் உள்ளது. நீங்கள் வாங்கி படித்து, **உண்மையான தெய்வம் இயேசுவை** அறிந்து கொள்ள வேண்டும் என்பதற் காகத் தான் இதை கொடுக்கிறோம் என்று சொன்னோம். பல வியாதியஸ் தர்களை சந்தித்து எண்ணெய் பூசி ஜெபித்தோம். மொத்தம் 800 சுவிசேஷப் புத்தகங்களும், 700 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**<u>குழு 4:</u> சகோ.தாஹாகனி, எபிநேசர், சூசைமாணிக்கம், ஸ்டீபன்ராஜ்.**

மேலப்புதுவயல் ஊராட்சியிலுள்ள 10 கிராமங்களில் வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்தோம். ஆர்வமுடன் வாங்கிக் கொண்டார்கள். ஒரு வீட்டில் சலவைத் தொழில் செய்கிறவர்கள் என்று எங்களுக்குத் தெரியாது. அவரிடம் போய் **துணியின் அழுக்கைப் போக்க சவுக்காரம் அவசியம் போல பாவ அழுக்கை நீக்க இயேசுகிறிஸ்து அவசியம்** என்று கூறியபோது, அவர் ஏற்றுக் கொண்டார். மொத்தம் 700 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 5:</u> சகோதரி மணியம்மாள், மேரி செல்லாபாய், தேவகிருபை, சலோமி சம்மனசு,**

நாங்கள் பள்ளத்துப்பட்டி ஊராட்சி யிலுள்ள கிராமங்களில் சென்று வீடுகள்தோறும் யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். எதற்காக கொடுக்கிறீர்கள் ? என்று கேட்டவர் களுக்கு, இந்த புத்தகத்தைப் படித்து **இயேசுவை ஏற்றுக்கொண்டால் பரலோகம் செல்லலாம். இல்லா விட்டால் நரகத்தில் சென்று வேதனை அனுபவிக்க வேண்டும்** என்று சொல்லிக் கொடுத்தோம். நாங்கள் அதிக தூரம் வெயிலில் நடந்து சென்று கிராமங்களில் மொத்தம் 800 சுவிசேஷப் புத்தகங்களும், 750 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 6: சகோ.பிரேம்ஆனந்த், அந்தோணி, ஜேசுதாஸ், யோசுவா.**

நாங்கள் சத்திரம், சீத்தாப்பட்டி, கணக்கோன்பட்டி கிராமங்களில் சென்று வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். இதில் ஒரு வாலிபன் உங்கள் மதத்தில் சேர்ப்பதற்கு இப்படி யெல்லாம் செய்கிறீர்களா ? என்று கேட்ட வருக்கு மதத்தில் சேர்ப்பதற்கு என்று சொல்வதை விட **இயேசுகிறிஸ்துவின் பெயரால் பாவமன்னிப்பு பெற்று பரிசுத்த வாழ்வை இயேசுவிடம் கேட்டு பெற்றுக் கொண்டவர் களுக்கு பரலோகம் நிச்சயம்** என்பதை சொல்லத் தான் வந்தோம் என்று சொன்னோம். மொத்தம் 1097 சுவிசேஷப் புத்தகங்களும், 850 சிலுவைக்கொடி களும் கொடுத்தோம்.

**குழு 7:சகோதரி மரியம்மாள், ரூத், கஸ்தூரி,தெபோராள்,பிச்சையம்மாள்**

நாங்கள் புலியூர் ஊராட்சியிலுள்ள கிராமங்களில் வீடுவீடாக சென்று சுவிசேஷப் புத்தகங்களையும் கைப்பிரதி களையும், சிலுவைக்கொடிகளையும் கொடுத்து **இயேசுகிறிஸ்துவே கர்த்தர்** என்று சொல்லி ஊழியம் செய்தோம். மக்கள் யாவரும் வாஞ்சையுடன் வாங்கி சத்தியத்தைக் கேட்டார்கள். மொத்தம் 790 சுவிசேஷப் புத்தகங்களும், 850 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 8:சகோதரி தெரசாபேபி, எஸ்தர் பேபி, மேரி மீனா, ஜோதி சாம்ராஜ், கிருபா பழனியம்மாள்.**

நாங்கள் சென்ற கிராமங்களிலுள்ள எல்லா வீடுகளிலும் சத்தியத்தை அறிவித்து, சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்தோம். **இயேசு பாவத்தைப் போக்கி பரலோகம் கொண்டு போய் சேர்ப்பார்** என்றோம். மொத்தம் 1600 சுவிசேஷப் புத்தகங்களும், 850 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 9:சகோ.மாற்கு மாரியப்பன், சாம்ராஜ், மகாராஜன், ஜேம்ஸ்.**

அண்டக்குளம் ஊராட்சியில் ஊழியம் செய்தபோது எங்களுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. ஜனங்கள் சந்தோஷமாக சுவிசேஷப் புத்தகங்களைப் பெற்றுக் கொண்டார்கள். ஆயவயல் என்ற கிராமத்தில் 10 பேருக்கும் மேலாக இருந்த கூட்டத்தில் சுவிசேஷத்தை சொன்னபோது சந்தோஷமாக கேட்டார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 850 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

**2008 ஜுலை மாத**
**இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : திண்டுக்கல்
யூனியன் : ஆத்தூர்
நாள் : 26.07.2008 சனி
நேரம் : காலை 9 மணி

**நடைபெறும் இடம்**

**பாஸ்டர் K.P. ஜான் கணேசன்,**
**சிறுமந்தை சுவிசேஷ ஜெபவீடு,**
**1/94A,மூவேந்தர் தெரு,**
**வத்தலக்குண்டு ரோடு,**
**செம்பட்டி - 624 707.**
**திண்டுக்கல் மாவட்டம்.**
**செல்: 9994914360**

**புதுக்கோட்டை மாவட்டம்**
**13 யூனியன் ஜெபஊர்வலம்**

கர்த்தருக்கு சித்தமானால் 2 நாட்கள் உபவாசத்துடன் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 13 யூனியன்களிலும் ஜெபஊர்வலம் செல்ல வாஞ்சிக்கிறோம்.

**இயேசுவின் பர்வதம்** திருச்சபை போதகர் சகாயராஜ் அவர்கள் தங்கள் சபை மக்களை ஜெபஊர்வலத்திற்கு அனுப்பவும், தன்னுடைய வாகனத்தை இலவசமாக உபயோகிக்க தரவும் முன் வந்துள்ளார்கள். தேவனுக்கே மகிமை.

## புறமத நண்பர்கள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

1. Sis.**ரேவதி ரவிச்சந்திரன்,**
சகோதரி பிரபாவதிக்கு காலில் கட்டி என்றும், உடல்நிலை சரியில்லை என்றும் ஜெபிக்கச் சொல்லி கடிதம் எழுதியிருந்தேன். நீங்கள் ஜெபித்து கடிதம் எழுதியிருந்தீர்கள். கர்த்தர் உங்கள் ஜெபத்தைக் கேட்டு நல்ல சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை.

2. Sis.**கீதா, திருவாரூர்.**
என் அண்ணிக்கு ஆண்குழந்தை பிறக்க வேண்டும் என்று வெள்ளிக்கிழமை உபவாசஜெபத்தில் ஜெபிக்கும்படி எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு ஆண்குழந்தையை கொடுத்தார்.

3. Sis.**அமுதவள்ளி, ஈரோடு.**
என் மகள் புனிதாவிற்கு அரசாங்க உதவித்தொகை கிடைக்கும்படி ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் உங்கள் ஜெபத்தைக் கேட்டு உதவித்தொகை கிடைக்க உதவி செய்தார்.

4. Sis.**தமிழரசி, ஈரோடு.**
என் நண்பர் குருசாமிக்கு மீண்டும் போஸ்ட் ஆபீஸ் வேலை கிடைக்கும்படி ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். உங்கள் ஜெபத்தினால் மீண்டும் வேலை கிடைத்தது. தேவனுக்கே மகிமை.

5. Sis.**ரேணுகாதேவி, ஈரோடு.**
என் மகளுடைய குடல் ஆப்பரேஷனுக்காகவும், தண்ணீர் குழாய் போடுவதற்காகவும் ஜெபிக்கச் சொல்லி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு மகளுக்கு ஆப்பரேஷன் நல்ல முறையில் நடக்கவும், தண்ணீர் குழாய் போடவும் உதவி செய்தார்.

6. Sis.**காயத்ரி, பெரம்பலூர்.**
எனக்கு போலீஸ் வேலை கிடைக்கும்படி ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். உங்கள் ஜெபத்தினால் எனக்கு போலீஸ் வேலை கிடைத்தது.

7. Sis.**லட்சுமி, விருதுநகர்.**
நான் கம்ப்யூட்டர் வகுப்பில் சேர்ந்தால் ரூ.100/– ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். நான் கம்ப்யூட்டர் வகுப்பில் சேர கர்த்தர் உதவி செய்தார்.

## விசுவாசிகள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

1. Bro.**அன்பழகன், வேலூர்.**
எங்கள் வீட்டில் 200 அடிக்கு போர் போட்டபோது, தண்ணீர் கிடைத்தால் "100–கிராம ஊழியம்" பத்திரிக்கையில் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். 20 அடி ஆழத்திலேயே தண்ணீர் கிடைத்து விட்டது. எனது அண்ணன் மகள் +2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற ஜெபிக்கும்படி தங்களுக்கு கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் நல்ல வெற்றியை கொடுத்தார்.

2. Bro.**சோமசுந்தரம், தஞ்சாவூர்.**
என் ஆஸ்துமா வியாதி குணமாகும்படி ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு நல்ல சுகத்தைத் தந்தார்.

3. Bro.**பாலசுப்பிரமணியன்.**
என் தம்பி மகனுடைய +2 தேர்வின் வெற்றிக்காக ஜெபிக்க எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு 830 மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற செய்தார்.

# திருச்சி TVGM குறுகிய கால சீஷத்துவ வேதாகம பயிற்சி நிலையம்









2008 ஏப்ரல் 25 முதல் மே 23 வரை டி.வி.ஜி.எம் தலைமை அலுவலகம் – சோமரசம்பேட்டையில் சீஷத்துவப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றது. முதல் நாளில் 13 பேர் கலந்து கொண்டார்கள். சகோ.பி.டி.கிறிஸ்டோபர் அனைவருக்கும் முழு வேதாகமம் இலவசமாக வழங்கி சீஷத்துவப் பயிற்சியின் நோக்கத்தை விவரித்து, ஜெபித்து ஆரம்பித்து வைத்தார்கள்.

திருச்சியிலுள்ள பாஸ்டர் பெனியேல், பாஸ்டர் ஜோசப், பாஸ்டர் ஜான் ராஜா, பாஸ்டர் டேவிட் ராஜா & சகோதரி ரோஸ்லின் அவர்களும், டி.வி.ஜி.எம் அலுவலக சகோதரிகள் சந்திரா, சோபியா, டெல்ஸி, சகோதரர் ராபின்சன், பேரின்பபாலன், ஆரோக்கியம், சகோதரி ஷோபனா இவாஞ்சலின் அவர்களும் வேதபாட வகுப்புகள் எடுத்தார்கள்.

சகோதரர் ராகுல் AJC அவர்கள் ஒரு மாதம் மாணவர்களை நல்ல முறையில் கவனித்து, அவ்வப்போது வகுப்புகளும் எடுத்தார்கள்.

இறுதி நாள் ஸ்தோத்திர ஆராதனை 23.05.2008 அன்று நடைபெற்றது. மாணவ, மாணவியருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. சீஷத்துவப் பயிற்சி நிலையத்தில் ஒவ்வொருவரும் பெற்ற நன்மைகளைக் குறித்து சாட்சி கூறினார்கள். தேவனுக்கே மகிமை.

**ஜெபித்த, கொடுத்த, உழைத்த அனைவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.**



**சகோ. ஏசுராஜ், அகினேஷ்புரம்.**

நான் டி.வி.ஜி.எம். குறுகிய கால வேதாகம பயிற்சிக்கு வந்த நாள் முதல் கர்த்தரை துதித்து சந்தோஷமாய் இருந்தேன். இந்த நாட்கள் எனக்கு புது அனுபவமாக இருந்தது. இங்கு வேதபாட வகுப்புகள் எடுத்த சகோதரர் பேரின்பபாலன் அவர்கள் என் வாழ்வில் நான் கிறிஸ்துவை பற்றி அறிந்து கொள்ள ஒரு தூண்டுதலாக இருந்தார். இங்கு வார்டனாக இருந்த சகோ.ராகுல் அவர்கள் நான் வேதாகமத்தை அதிகமாக படிக்க தூண்டுதலாக இருந்தார். நான் இங்கு வந்ததால் மனந்திரும்பி, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றுக் கொண்டே.ன். தேவனுக்கே மகிமை.

**சகோ. சங்கர் டேனியல், அகினேஷ்புரம்.**



நான் ஆர்.சி. குடும்பத்தை சார்ந்தவன். இந்த வேதாகம பயிற்சி நாட்களில் பாஸ்டர் ஜான் ராஜா அவர்கள் மூலம் ஜெபிக்க கற்றுக் கொண்டேன். எங்கள் வார்டன் சகோ.ராகுல் மூலம் புதியஏற்பாடு மற்றும் பழைய ஏற்பாடு பற்றி தெரிந்து கொண்டேன். சகோதரி சந்திரா **சமாதானம் தரும் தேவன் இயேசு** என்று கற்றுக் கொடுத்தார்கள். சகோதரி சோபியா மூலம் மனிதனின் முக்கிய பிரச்சனைகள் பற்றி தெரிந்துகொண்டேன். பாஸ்டர் ஜோசப் அவர்கள் தேவனின் ஆசீர்வாதங்களை பற்றி கூறினார்கள். பாஸ்டர் பெனியேல் மூலம் ஞானஸ்நானம் பற்றியும், சுவிசேஷம் மற்றும் விசுவாசம் பற்றி தெரிந்து கொண்டேன். சகோதரர் பேரின்ப பாலன் மூலம் சாத்தானின் கிரியைகளை பற்றி தெரிந்து கொண்டேன். இந்த அனுபவம் என் வாழ்வில் புதுமையாகவும், ஏற்றதாகவும், நல்ல பழக்கங்களை கற்றுக் கொள்ள நல்ல வாய்ப்பாகவும் இருந்தது. கர்த்தரை பற்றி அதிகமாக தெரிந்து கொண்டேன்.

**சகோதரி உமா, கண்டனூர்.**



நான் பரம்பரை இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவள். இயேசுகிறிஸ்துவைப் பற்றியும், வேதாகமத்தைப் பற்றியும் எதுவுமே எனக்கு தெரியாது. இந்த வேதாகமப் பயிற்சியில் கலந்து கொண்டு படித்த பிறகு தான் ஜெபம் எவ்வாறு செய்ய வேண்டும், துதிஆராதனை, ஸ்தோத்திரங்கள் என்று தனித் தனியாக முறையாக கற்றுக் கொண்டேன். எங்களுக்கு வேதபாடம் எடுத்த ஆசிரியர்கள் யாவரும் மிகவும் தெளிவாக, புரியும்படி நடத்தியதால் சுலபமாக கற்றுக் கொள்ள முடிந்தது. இந்துக் குடும்பத்திலுள்ள பெண் என்பதால் உலகபிரகாரமாக வாழ்ந்த எனக்கு இது ஒரு வித்தியாசமான அனுபவமாக இருந்தது. ஏதோ பிறந்தோம், வாழ்ந்தோம் என்று இருந்த நான் இங்கு வேதபாடங்களை கற்றுக் கொண்ட பிறகு, நான் செய்த பாவத்திற்காக தன்னையே பலியாக கொடுத்த இயேசுவைப் போல நானும் பிரயோஜனமாக வாழ ஆசைப்படுகிறேன்.

**ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்.**

**நன்றி: Mr.Raffle & Family - Emmanuel Christian Fellowship**







சேலம் மாவட்டத்தில் தாராமங்கலம்
அருகிலுள்ள **அத்திக்காட்டனூர்**
இலங்கை அகதிகள் முகாமிலுள்ள
56 குடும்பங்களுக்கு ( 204 பேர் )
08.06.2008 ஞாயிறு
மாலை 6 மணிக்கு சிறப்பு
விருந்தளிக்கப்பட்டது.







சேலம் மாவட்டம் – **கொங்குப்பட்டி**
கிராமத்தில் ஏழைகளுக்கு தொழில்
செய்வதற்காக ஓலை ஷெட்,
5 கைத்தறி அமைக்கப்பட்டு,
08.06.2008 ஞாயிறு
மதியம் 1 மணிக்கு தேவனுடைய
மகிமைக்கென்று பிரதிஷ்டை
செய்யப்பட்டது.

# பஞ்சப்பூர் - தொழுநோயாளிகள்

**நன்றி: Mr.Raffle & Family - Emmanuel Christian Fellowship**









திருச்சி மாவட்டம் – பஞ்சப்பூர் கிராமத்திலுள்ள தொழுநோயாளர் மற்றும் ஏழைகள் 100 பேருக்கு 20.04.2008 அன்று உணவுப் பொட்டலம் வழங்கப் பட்டது. வீடு பழுதாய்ப் போனவர்களுக்கு புதுப்பித்துக் கொடுக்கப்பட்டது.





28.05.2008 அன்று கும்பகோணம் மருத்துவமனைக்கு டி.வி.ஜி.எம். ஸ்தாபகர் சகோ. பி.டி.கிறிஸ்டோபர் நேரடியாக சென்று சகோதரி கிருபாவதி ஆனந்தராஜ் அவர்களுடைய கர்ப்பப்பை ஆப்பரேஷனுக்காக ஜெபித்து அன்றைய முழு செலவுகளையும் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். சகோதரி கிருபாவதிக்கு நிரந்தர சுகத்தை தேவன் கட்டளையிட ஜெபியுங்கள்.

# புதுக்கோட்டை மாவட்டம் இயேசுவுக்கே
# இயேசுவுக்கே புதுக்கோட்டை மாவட்டம்

சுவிசேஷ ஊழியத்தில் வறட்சியான மாவட்டங்களில் ஒன்று புதுக்கோட்டை மாவட்டமாகும்.

இந்த மாவட்டத்தில் **ஆலயமில்லாத ஊரில் தங்கியிருந்து**, **வாடகை வீட்டில் ஆராதனை நடத்தி வருபவர்கள்**,

**சொந்த நிலம் வாங்கியிருந்தால்**, பத்திரத்தின் நகல், சபை மக்கள் போட்டோ, போதகர் குடும்ப போட்டோவுடன் TVGMக்கு தபால் எழுதுங்கள். நேரம் கிடைக்கும் போது நேரடியாக வந்து பார்வையிடுகிறோம். பத்திரிக்கையில் வெளியிடுகிறோம்.

பொதுவாக கிராமத்தில் மிகவும் பொருளாதார நெருக்கடியில் ஊழியம் செய்யும் முழுநேர ஊழியர்களுக்கு 15'X 30' அடி அளவில் ஜெபவீடு கட்டி கொடுக்க வாஞ்சிக்கிறோம். முயற்சிக்கிறோம். ஆனாலும் குறைந்தபட்சம் 25% முதல் 35% வரை (அதாவது மூன்றிலொரு பகுதி) சபை மக்கள் முன் பணமாக செலுத்தி சபை கட்டிட அஸ்திபாரப் பணியை செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும்.

தகுதியானவர்களுக்கு TVGM "100 கிராம ஊழியம்" மாதாந்திர பத்திரிக்கையின் மூலம் **ஜெபவீடு** கட்டி தர முன் வருபவர்களை கண்டுபிடித்து அவர்கள் சபை அல்லது குடும்ப சார்பில் ஜெபவீடு கட்டித்தர ஏற்பாடு செய்யப்படும். இது ஒரு விசுவாச ஊழியம் ஆகும்.

இதற்குரிய விண்ணபப்பப்படிவத்தை TVGM தலைமை அலுவலகத்தில் தபால் மூலம் பெற்று, முழு விபரத்தையும் பூர்த்தி செய்து அனுப்புங்கள். விண்ணப்பபடிவம் பெற ரூ.10/– மணியார்டர் செய்யுங்கள்.

## மாதாந்திர 100 கிராம ஊழியம்

**(ஆண்/பெண் 18 வயதுக்கு மேற்பட்ட தன்னார்வ தொண்டர்கள் தேவை)**

ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட மாவட்டத்தில் 5 நாட்கள் "100–கிராம ஊழியம்" நடைபெறுகிறது. கலந்து கொள்ள வாஞ்சிக்கும் ஆண்கள், பெண்கள் ரூ. 5/– அனுப்பி "அனுமதி தபால்" பெற்றுக்கொள்ளுங்கள்.

உங்கள் துணிமணி/ பஸ் டிக்கெட்டுடன் நாங்கள் குறிப்பிடும் மாவட்டத்திற்கு வர வேண்டும். 5 வது நாள் இரவு ஊழியத்தை முடித்து செல்லும்போது, இரு வழி பயணகட்டணம் வழங்கப்படும். கிராமத்தில் கிடைத்த இடத்தில் சாப்பிட்டுக் கொண்டு, இரவு தங்கி 5 நாள் ஊழியம் செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும். இது ஒரு சபை பாகுபாடற்ற இயக்கமாகும். மேலும் இது ஒரு கௌரவ சேவையாகும்.

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** "100–கிராம ஊழியம்" மாதந்தோறும் இரண்டு யூனியன்களில் நடத்த ஆத்துமபாரமுள்ள தலைவர், தன்னார்வ தொண்டர்களை கர்த்தர் கட்டளையிட ஜெபியுங்கள். புதுக்கோட்டை மாவட்டத்தில் TVGM உதவியுடன் நடைபெறும் AJC சுவிசேஷகுழுவுக்காக தேவனைத் துதியுங்கள். ஜூலை 14-18 வரை குமரி மாவட்டம் – தோவாளை யூனியனில் நடைபெறும் 100–கிராம ஊழியத்திற்காக, தன்னார்வ தொண்டர்களின் பாதுகாவலுக்காக ஜெபியுங்கள்.

**செவ்வாய்:** பின்தொடர் பணிக்காக ஜெபியுங்கள். கடிதத்தொடர்பு ஊழியம், இயேசுவை விரும்புவோர் முகாம் மூலம் ஜீவனுள்ள சாட்சிகள் எழும்பி தேவனை மகிமைப்படுத்த ஜெபியுங்கள். ஆத்தும பாரத்துடன் அருகிலுள்ள சபை போதகர்கள் கிராம மக்களை சந்தித்து சபையில் ஐக்கியம் கொள்ள வழிநடத்த ஜெபியுங்கள்.

**புதன்:** TVGM தலைமை அலுவலகத்தில் மாதந்தோறும் Discipleship& Leadership பயிற்சி நடைபெற, அனுகூலமான வாசல்களை கர்த்தர் திறக்க ஜெபியுங்கள். (இதற்காகவே நெல்லை மாவட்டத்திலிருந்து TVGM, ஸ்தாபகர் குடும்பம் திருச்சிக்கு வந்தார்கள்)

**வியாழன்:** ஆலயமில்லாத கிராமங்களில் தரிசனத்துடன் ஊழியம் செய்யும் சுயாதின ஊழியர்களை அடையாளம் கண்டு, அவர்களை ஜெபத்தில் தாங்கவும், நிலம் வாங்கியுள்ள ஊழியர்களுக்கு அவர்களுடைய முயற்சியுடன், பெரும்பங்குடனும் TVGM இணைந்து ஜெபவீடு கட்டிக்கொடுக்க ஜெபியுங்கள்.

**வெள்ளி:** திருச்சி குண்டல் TVGM திக்கற்ற சிறுவர் இல்லத்தில் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு நல்ல கல்வி, ஆவிக்குரிய பயிற்சி அளிக்கப்பட்டு, கர்த்தருக்கு சாட்சியாக எழும்ப ஜெபியுங்கள். இன்னும் அநேக பிள்ளைகளுக்கு உதவி செய்ய ஜெபியுங்கள்.

**சனி:** 100– கிராம ஊழியம், தமிழ் கிராமங்களுக்கு சுவிசேஷம் ஆகிய பத்திரிக்கைகளின் மூலம் ஆசீர்வாதம் பெறும் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கவும், தேவனுக்கு சாட்சியாக வாழவும் ஜெபியுங்கள்.

**ஞாயிறு:** TVGM கிளை அலுவலகம், குண்டல் சிறுவர் இல்லம், தலைமை அலுவலகம், ஆகியவற்றில் பணிபுரியும் முழு நேர, பகுதிநேர ஊழியர்கள், கமிட்டி உறுப்பினர்கள் கர்த்தருக்குள் பெலனடைந்து சாட்சியாய் வாழ ஜெபியுங்கள்.

**புதுக்கோட்டை மாவட்ட கிராம ஊழியர்களுக்காக விசேஷமாக ஜெபியுங்கள்!**

இம்மாவட்டத்தில் மிகக் குறைவான ஊழியர்கள் கிராம ஊழியம் செய்து வருகிறார்கள். வாடகை வீடுகளில் ஜெபம் நடத்தி வருகிறார்கள். இவர்களுக்கு கிராமங்களில் ஜெபவீடு கட்ட கர்த்தர் நிலத்தை கிருபையாக கட்டளையிட உங்கள் ஜெபத்தில் தவறாமல் நினைத்துக் கொள்ளுங்கள்.

**திருச்சி TVGM அலுவலக சேவைக்கும்**
**நாகர்கோவில் அறிமுகபணி அலுவலகத்திற்கும்**
**ஆத்மபாரமுள்ள அர்ப்பணிப்புள்ளவர் தேவை.**

1. அக்கவுண்டென்ட், குறைந்தபட்சம் +2 தேர்ச்சி பெற்றவர்கள் தமிழ், ஆங்கிலம் டைப் , கம்பியூட்டர், Tally அல்லது வேறு அக்கவுண்டுகளில் நன்கு அனுபவமுள்ள சகோதரி தேவை.
2. 1 முதல் 12 வகுப்பு வரை படிக்கிற தாய், தகப்பனில்லாத பிள்ளைகளின் படிப்பு , சரீரசுகம் , ஆவிக்குரிய வாழ்க்கை மேல் கவனம் செலுத்தக்கூடிய நிர்வாக திறமையுள்ள சகோதரன் தேவை.
3. வீடியோ எடுக்கவும், எடிட்டிங் பண்ணவும் வாஞ்சையுள்ள ஆண்கள் தேவை.
4. திருநேல்வேலி, கோடாவிளை, TVGM காம்பவுண்டில் தோட்ட வேலை செய்யவும், காவல் காக்கவும் ஆண் நபர் தேவை.
5. திருநெல்வேலி குண்டல் சிறுவர் இல்லத்தில் 1 முத்ல் 5 வகுப்பு வரை படிக்கிற பிள்ளைகளை கவனிக்க ஒரு சகோதரி தேவை.
6. கிராமங்களில் ஆலயம் கட்ட வேண்டிய இடங்களை பார்வையிடவும் கட்டிட வேலையை கவனிக்கவும் சகோதரர் தேவை.

**தொடர்பு முகவரி: TVGM, 100-Village, Somarasampettai, Trichy.**

**நாகர்கோவில் அறிமுகப்பணி அலுவலகத்திற்கு**
**அறிமுகப் பணியாளர் தேவை!**

எழுதப்படிக்கத் தெரிந்து, ரசீதுப் போட்டு கொடுக்கத் தெரிந்த, இரட்சிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற, உண்மையுள்ள, தியாகமாக, நேரம் கணக்குப் பார்க்காமல் ஊழியம் செய்ய ஒப்புக்கொடுக்க ஆயத்தமுள்ள சகோதரிகள் தேவை.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:–

**T.V.G.M.குமரி மாவட்ட அறிமுகப்பணிஅலுவலகம்,**
**5 / 3A** கிரவுண் தெரு, வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001. கன்னியாகுமரி மாவட்டம்.
**செல் : 98658 26424 போன் : 04652- 277251.**

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

**POSTAL REGISTRATION NUMBER**

TN / TR / 17 / 2006 - 2008 ( Inland ) TN / TR / 18 / 2006 - 2008 ( Foreign)

**LICENCED TO POST WITHOUT PREPAYMENT**

TN / TR / 09 / WPP ( Inland ) Posting Date 25th at H.P.O. Trichy.

TN / TR / 09 / WPP ( Foreign) Posting Date 20th at H.P.O. Trichy

## TVGM தலைமை அலுவலகம்

(ALL RECEIPTS ARE TREATED AS OFFERING TO TVGM)

**காணிக்கை மற்றும் தபால் அனுப்ப வேண்டிய முகவரி:–**

**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**4 / 272, HUNDRED VILLAGE**
**SOMARASAMPETTAI,(Hospital Stop)**
**TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.**

**Bank டிராப்ட் எடுக்கும் முறையும் நோக்கமும்:-**

| | |
|---|---|
| TAMIL VILLAGE GOSPEL MISSION | (100- கிராம ஊழியம், ஜெபவீடு) |
| T.V.G.M. SOCIAL SERVICE | (சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி) |
| T.V.G.M. PUBLICATION | ( பத்திரிக்கை சந்தா, அச்சகம்) |

**ஸ்தாபனத்தின் பெயரில் டிராப்ட் எடுக்க முடியாவிட்டால் தயவுசெய்து MR. STEPHEN CHRISTOPHER, SB A/C NO 18538 CANARA BANK, Code : 1249 Puthur Branch, TRICHY, PIN - 620 017, Tamil Nadu. என்ற பெயரில் டிராப்ட் எடுத்து, மேற்கண்ட TVGM தலைமை அலுவலக முகவரிக்கு அனுப்பி வைத்து உதவுங்கள்.**

TVGM தொடர்புகளுக்கு

STD Ph : 0-431 - 2607241
Fax : 0-431- 2607446
Mobile : 94435 - 44628
Email : 100village@tvgm.org

*Website :*

**www.tvgm.org**

தினசரி வாக்குத்தத்தம், செய்தி மற்றும் கிராம ஊழிய அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

### மாதாந்திர பத்திரிக்கை

**“100–கிராம ஊழியம்”** என்ற கிறிஸ்தவ மாதாந்திர பத்திரிக்கையை தமிழ் / ஆங்கிலத்தில் வாங்கி படியுங்கள். ஜெபியுங்கள்.

REG. NEWS PAPER **R.N.I. Number : TNMUL / 2000 / 4011**

**HUNDRED VILLAGE MINISTRY** ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

ഹണ്ട്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി हन्ड्रेड विलेज मिनिस्ट्री